# வருடாந்த அறிக்கை

# 2012



**தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம்**

**தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்**

**பேராதனை.**

# <u>இலங்கையின் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியம்</u>

## வருடாந்த அறிக்கை - 2012

இலங்கையின் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியம் என்ற பெயரில் அப்போதைய விவசாய, காணி மற்றும் வனவள அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 1995-12-15ம் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தை கருத்திற்கொண்டு 1996-02-07ம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் **தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியத்தை** ஏற்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

தாவரவியல் பூங்காக்களுக்கான நுழைவுச் சீட்டு விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 25%த்தை வருடாந்தம், தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியத்திற்கான வருமானமாக ஒதுக்கீடு செய்வதோடு, இந்நிதியத்தின் பிரதான வருமான மூலம் அதுவாகும். அதற்கு மேலதிகமாக இந்நிதியமானது தனது வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக பொருத்தமான நடவடிக்கைகளில் ஈடுபடவும் முடியும்.

# தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம்

1. நம்பிக்கை நிதியத்தின் பெயர் : இலங்கையின் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியம்.

2. தன்மை : தாவரவியல் பூங்காக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மீண்டெழும் செலவின நடவடிக்கைகளுக்கு நிதி உதவி வழங்குதல்.

3. உரிய சுற்று நிருபங்கள் :

   I) நிதியத்தை ஆரம்பித்தல் - 1917ம் ஆண்டின் 09ம் இலக்க நம்பிக்கை நிதிய கட்டளைச் சட்டத்தின் படி.
   II) கணக்கு வைத்திருத்தலுக்கும் கணக்குகளை அறிக்கைப் படுத்தலுக்குமான திறைசேரிச் சுற்று நிருபம் : 1977 ஆகஸ்ட் 16ம் திகதிய 836ம் இலக்கச் சுற்று நிருபம்.


4. ஆரம்பித்ததிகதி : 1996 டிசம்பர் 20
5. அலுவலகம் : பேராதனை, தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்கள பிரதான பணிமனை.
6. வங்கி : இலங்கை வங்கியின் பேராதனைக் கிளை, கணக்கு இலக்கம் : 0007040848
7. நம்பிக்கை நிதியத்தின் குறிக்கோள்கள் :
   அ) இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் எமது தாவரவியல் பூங்காக்கள் தொடர்பில் நிலவும் அபிபிராயங்களை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
   ஆ) சூழலியல், கல்வியியல் மற்றும் தாவரங்கள் தொடர்பில் தற்போது நிலவும் பாதுகாப்பு முறைமைகள் பற்றி அர்த்தமுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
   இ) தாவரவியல் பூங்காக்களில் சேவையில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகளது துறைசார் அறிவு, செயற்பாடுகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துவதோடு உரிய செயற்பாடுகளுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியுதவி வழங்குதல்.
   ஈ) தாவரச் சேமிப்புக் குறித்தும் முன்னேற்றகரமான வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்.
   உ) தாவரவியல் பூங்காக்களின் பயன்பாட்டுக்காக சூழலியல், கல்வியியல் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலான தொழில்நுட்பத்துறை சார் செயற்பாடுகளை மேம்படுத்தலும் அவற்றுக்கு உதவுவதும்.
   ஊ) தாவரவியல் விஞ்ஞானிகளுக்கும் மற்றும் பூங்காவிற்கு வருகை தருகின்றவர்களுக்கும் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதற்குத் தேவையான எந்தவொரு அவசர நிர்மாணாப் பணியையும்பொறுப்பேற்றல்.
   எ) தேவையான சந்தர்ப்பகளில் மீண்டெழும்செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளில் ஏற்படும் குறைகளை குறை நிரப்புச்செய்தல்.

<u>நிதியத்தின் நிதி முன்னேற்றம்</u>

| | |
|---|---|
| 2012-01-01ம் திகதிக்கான வைப்பு மீதி | = ரூ. 59,918,097.43 |
| <u>சேர்க்கப்பட்டது:</u> | |
| 2012ம் வருடத்துக்கான வருமானம் (வைப்பு) | = ரூ. 92,034,488.69 |
| | ------------------------- |
| | ரூ. 151,952,586.12 |
| <u>கழிக்கப்பட்டது:</u> | |
| 2012ம் வருடத்துக்கான செலவு (பற்று) | ரூ. 89,237,194.52 |
| | ------------------------- |
| 2012-12-31ம் திகதிக்கான திறைசேறி மீதி | <u>ரூ. 62,715,391.60</u> |

**<u>நிதியத்தின் ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி 2012ம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட விஷேட அபிவிருத்திப் பணிகள்.</u>**

- தாவரவியல் பூங்காக்களை அழகுபடுத்துதற்கான மீண்டெழும் செலவுகள் போதுமானதாக அமையாததனால் நிதியத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பூங்காக்கள் இவ்வருடத்தில் அழகுமிக்கனவாகப் பேணப்பட்டன.



பேராதனை தாவரவியல் பூங்காவின் ஒரு தோற்றம்

❖ தாவரவியல் பூங்காக்களின் வசதிகளை மேம்படுத்தலின் கீழ் தாவரவியல் பூங்காக்களில் சேவையில் ஈடுபட்டுள்ள பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த ஊழியர்களைப் பயிற்றுவித்தல், அவர்களுக்கு சீருடை வழங்குதல், பூச்செடிகள், விதைகள், பூ வளர்ப்பு சாதனங்கள் மற்றும் நூலகப் புத்தகங்களை உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகளிலிருந்து பெற்று வழங்கப்பட்டுள்ளது.




ஹக்கல தாவரவியல் பூங்காவின் ஒரு தோற்றம்

❖ பல்வேறு இயற்கை மற்றும் சூழலியல் காரணங்களினால் பல வருடங்களாக பழுதடைந்திருந்த பேராதனை தாவரவியல் பூங்காவின் பிரதான பாதையின் 1.427 கி.மீ. வரையான பகுதி காபட் இடப்பட்டு, திறம்பட திருத்தியமைக்கப்பட்டதோடு, பூங்காவின் அத்தியாவசியமான சில இடங்கள் “இண்டர்லொக்ஸ்” கற்கள் பொருத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டது.



பேராதனை தாவரவியல் பூங்காவின் வாசனைத் திரவியத் தோட்டத்தில் “இண்டர்லொக்ஸ்” கற்கள் பொருத்தப்பட்டுள்ள விதம்

❖ பேராதனை தாவரவியல் பூங்காவின் தொழிலாளர் வீடுகளில் 02ம் இலக்க வீட்டின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் மூலம் தொழிலாளர் வீடுகளுக்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டன.



பேராதனை தாவரவியல் பூங்காவின் பிரதான பாதைக்கு காபட் இடல்

❖ பேராதனை தாவரவியல் பூங்காவின் நடவடிக்கைகளை செயற்றிறன் மிக்கதாக மேற்கொள்ள உதவும் வகையில் பூங்காவின் தொழிலாளர் வேலைத்தள அலுவலகத்தின் வசதிகள் மேம்படுத்தப்பட்டன. அதன் போது வேலைத்தளம், தொழிற்சாலை, நீர்க் குழாய் திருத்த வேலைகளைச் செய்யும் வேலைத்தளம், கள அலுவலகங்கள் ஆகியவற்றை ஒரே கட்டிடத்துக்குககொண்டு வரும் பொருட்டு ஊழியர் வேலைத்தள இல்லமொன்றை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.



பேராதனை தாவரவியல் பூங்காவின் தொழிலாளர் வேலைத்தள அலுவலகக் கட்டிடம்

- ❖ பேராதனை தாவரவியல் பூங்காவின் அந்தூரியம் நாற்று மேடையின் பயிற்சி வகுப்பறைகளை மேம்படுத்துவதனூடு, பயிற்சி பெறுவோருக்கு மேலதிக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.



பேராதனை தாவரவியல் பூங்காவின் அந்தூரியம் நாற்று மேடையின் பயிற்சி வகுப்பறைகளின் திருத்த வேலைகள்

- ❖ இலங்கை ஹதபிம அதிகார சபைக்குச் சொந்தமான, பேராதனை தாவரவியல் பூங்காவினுள் அமைந்துள்ள இலக்கம் 1098 ஐ உடைய கட்டிடம் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்துக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது.



கம்பஹ தாவரவியல் பூங்காவின் உள்ளக வீதிகளுக்குக் காபட் இடல்

- ❖ கம்பஹ தாவரவியல் பூங்காவின் உள்ளக வீதிகள் 750 மீட்டர்கள் வரை மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையால் காபட் இடப்பட்டது.

- ❖ தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் தாவரவியல் விஞ்ஞான ஆய்வுப் பணிகளுக்காக நிதி வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதன் கீழ் அருமையான தாவரங்களின் சேகரிப்பு, தாவரங்கள் குறித்த கள ஆய்வுகளை மேற்கொள்ளல், ஆய்வுகள் / செயலமர்வுகளுக்காக விஞ்ஞான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



தாவரங்கள் குறித்த கள ஆய்வுகளை மேற்கொள்ளல்

- ❖ ஹக்கல தாவரவியல் பூங்காவின் உள்ளக வீதிகள் 2.083 கிலோ மீட்டர்கள் வரை மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையால் காபட் இடப்பட்டதோடு ஒடுங்கிய பாதைகள் "இண்டர்லொக்ஸ்" கற்கள் பரப்பப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டது.



தேசிய தாவரவியல் கூடத்தில் முதன் முதலாக நடாத்தப்பட்ட தாழ்நிலத் தாவரங்கள் பற்றிய தேசிய செயலமர்வில் செயன்முறை ஆய்வு இடம்பெறும் சந்தர்ப்பமொன்று.

- ❖ தாவரவியல் பூங்காக்களின் வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

- பூ வளர்ப்போர் மற்றும் பயிற்சி பெறுவோர் பயன்படுத்தவென விற்பனைக்காக பூச்செடி வளர்ப்பு வழிகாட்டல் புத்தகங்கள் 3500 அச்சிடப்பட்டன.




ஹக்கல தாவரவியல் பூங்காவின் உள்ளக வீதிகள் காபட் இடப்படல்.



அச்சிடப்பட்ட பூச்செடி வளர்ப்பு வழிகாட்டல் புத்தகங்கள்

**<u>நிதியத்தின் கீழ் 2012ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட விஷேட அபிவிருத்திப் பணிகள் பற்றிய சுருக்கம்.</u>**

| விடயம் | செலவு (ரூ) |
|---|---|
| 1. தாவரவியல் பூங்காக்களின் வசதிகளை மேம்படுத்ததுல், பூங்கா அலங்கார வேலைகள் | 10,629,239.00 |
| 2. தாவரவியல் பூங்காக்களின் காணி அபிவிருத்திப் பணிகள் | 44,246,333.00 |
| 3. தாவரவியல் பூங்காக்களின் கட்டிட அபிவிருத்திப் பணிகள் | 12,237,357.00 |
| 4. வசதிகளை மேம்படுத்துவதற்கான உபகரணக் கொள்வனவு | 2,513,377.00 |
| 5. ஆய்வு மற்றும் பயிற்சிகள் மற்றும் நூலக வசதிகளை மேம்படுத்துதல் | 1,500,000.00 |
| மொத்தம் | 71,126,306.00 |

கலாநிதி. விலீ கமகே

தலைவர், தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம் மற்றும் செயலாளர், தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு.

கலாநிதி. டீ. எஸ். ஏ. விஜேசுந்தர

செயலாளர், தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம் மற்றும் பணிப்பாளர் நாயகம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்